(7) அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை.

திரு. என். கிட்டப்பா : 1973-74 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் இனங்கள்) குறித்த மேற்படி குழுவின் ஐந்தாவது அறிக்கையை அவை முன் வைக்கிறேன்.

(8) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

9. அறிவிப்பு.

தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

(ஆ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(10) 1978-79 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டின் முதலாவது கூடுதல் மதிப்பீடுகளை அவையில் வைக்க முன் வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

2. வருவாய்க் கணக்குகளில் 15·89 கோடி ரூபாய்க்கும், மூலதனக் கடன் கணக்குகளில் 6.63 கோடி ரூபாய்க்குமாக, மொத்தம் 22·52 கோடி ரூபாய்க்கு கூடுதல் மதிப்பீடுகள் அவையின் முன் வைக்கப்பட்டுள்ளன. பொதுவாக, இவற்றின் மூலம், நிதி ஒதுக்க மசோதா அங்கீகரிக்கப்பட்ட பின்னர், இந்த ஆண்டில் அரசால் ஏற்பளிக்கப்பட்ட, வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்படாத செலவினங்களுக்கு நிதி ஒதுக்கம் கேட்கப்பட்டுள்ளது.

3. நீர்த் தேக்கங்களில் மீன் வளர்ப்புப் பணிகளை மும்முரப்படுத்துவதற்காக, மதுரை, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் மீனவர் மேம்பாட்டு நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிதம்பரம் தாலூக்கா, கிள்ளையில், 50 ஹெக்டேர் பரப்பில், 13 இலட்சம் ரூபாய் செலவில் உப்பு நீர் மீன் பண்ணை ஏற்படுத்தும் திட்டம் ஒன்று புதிதாக செயல்படுத்தப்படும். நீலகிரி மாவட்டத்தில் டயஸ்கோரியா (Dioscorea) வளர்த்து அதிலிருந்து மருந்துச் சத்தைத் (Diosgenin) தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட இருக்கிறது. இதற்காக இவ்வாண்டிற்கு வருவாய்க் கணக்கிலும் மூலதனக் கணக்கிலும் மொத்தமாக 10 இலட்சம் ரூபாய் மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. வரவு-செலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டதற்கேற்ப, 8 மாவட்டங்களில் மாவட்டத் தொழில் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன ; இவைகளுக்காக 78·62 இலட்சம் ரூபாய் செலவிற்கு அவையின் அனுமதி கோரப்படுகிறது. ஐம்பதாயிரத்திற்கும் குறைந்த மக்கள் தொகையுள்ள பகுதிகளில் தொடக்க